[1970 செப்டம்பர் 8

கிராம வளர்ச்சித்துறை புனரமைப்பு.

307 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கிராம வளர்ச்சித் துறையை புனர் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (அ) ஆம்.

(இ) அரசு இவ்விஷயத்தில் முடிவெடுத்தவுடன்.

திரு. சு. துரைசாமி தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆம் என்று தெரிவித்தார்கள். எந்தெந்த முறையில் புனர் அமைப்பு செய்யப் போகிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, வட்டாரங்களின் அமைப்பை (பிளாக் செட் அப்) புனரமைப்பு முக்கியமாக வட்டார வளர்ச்சி அலுவலர்களின் வேலைகளைக் குறைக்கும் நோக்கத்துடன் வட்டார அலுவலா களின் வேலைகளில் சில மாறுதல்கள் செய்ய அரசு உத்தேசித்துள்ளது. தற் பொழுது வட்டார வளர்ச்சி அலுவலர் வட்டாரத்திலுள்ள விவசாய விஸ் தரிப்பு அலுவலர், கல்வி விஸ்தரிப்பு அலுவலர், ஊராட்சி ஒன்றியத்தின் பொறி யர், கூட்டுறவு விஸ்தரிப்பு அலுவலர், தொழில் விஸ்தரிப்பு அலுவலர், மற்றும் பல விஸ்தரிப்பு அலுவலர்களின் அலுவல்களை நேரடியாக மேற்பார்வை பார்க்க வேண்டியிருக்கிறது. இதனால் அவருக்கு வேலைப் பளு அதிகம். வட்டாரத்தின் புனரமைப்புத் திட்டப்படி வட்டாரம் நான்கு பிரிவுகளாகப பிரிக்கப்பட்டு, நான்கு பிரிவுகளிலும் செயல்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் ஒரு குறிப்பை பெற்றுள்ளது. இதை கிராம வளர்ச்சி இயக்கு நரோடு கலந்தாலோசித்து இன்னும் முடிவெடுக்காமல் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது இந்த ரூரல் டெவலப் மெண்ட் டிப்பார்ட்மெண்டு, இந்த கம்யூனிடி டெவலப்மெண்டு டிப்பார்ட் மெண்டுகளை திருத்தி அமைக்கும்போது இந்தத் துறையிலே பணியாற்றுகின்ற வர்களை நேரடியாக அல்லது எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சு மூலமாகவோ, ஒன்றியத் தலைவர் மூலமாகவோ செய்து கொள்வதற்குப் பதிலாக இதற்கென்று தனியாக ஒரு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஏற்படுத்தினால் இந்த ரூரல் டெவலப் மெண்டு டிப்பார்ட்மெண்டு வேலைபார்ப்பதற்கு நல்ல திறமையான ஊழியர் கள் இந்த வேலைக்கு மனு போடுவார்கள். அப்படி இருந்தால் யோசிப்பதற்கோ பரிசீலனை செய்வதற்கோ இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தனித் துறை அமைப்பது என்பது அரசாங்கத்தின் முடிவல்ல. இருக்கிற நிலைமையை புனர்அமைப்பதுதான் அரசாங்கத்தின் கருத்தில் இருக்கிறது. இப்போது நியமனங்கள் விதிமுறை களின்படி செய்யப்படுகின்றன. அதற்காக தனி சர்வீஸ் கமிஷன் நிலை ஏற்பாடு செய்யலாமா என்று கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படிப் பட்ட நிலைமை எதுவுமில்லை.